# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை:திரு. செ. தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 65 / 2020</u>**

**<u>BY RPAD</u>**

திரு. P.மகாலிங்கம்,
த/பெ. பெரியசாமி,
22/10, ஜெயகோபால் வீதி,
கருங்கல்பாளையம்,
ஈரோடு – 638 003. . . . . மேல்முறையீட்டாளர்
(திரு. P.மகாலிங்கம்)

எதிர்

1. செயற்பொறியாளர்/இ&ப/நகரியம்/ஈரோடு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, EVN ரோடு, ஈரோடு – 638 009.

2. உதவி செயற்பொறியாளர்/இ&ப/மேற்கு/ஈரோடு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மேட்டு கடை பவர் ஹவுஸ், ஈரோடு – 638 102.

3. உதவி மின்பொறியாளர்/நசியனூர்,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
SF No. 45/4, திங்கலூர் ரோடு,
நசியனூர் – 638 107. . . . எதிர்மனுதாரர்கள்
(திரு.P.அன்புசெழியன், உதவி செயற்பொறியாளர்/இ&ப/மேற்கு/ஈரோடு
திரு.R.S. ராஜேஷ் சேகரன், உதவி மின்பொறியாளர்/நசியனூர்)

**<u>கேட்புரை நாள்: 27–01–2021</u>**

**<u>ஆணை நாள் : 24–03–2021</u>**

07.12.2020 அன்று பெறப்பட்ட திரு. P.மகாலிங்கம், த/பெ. பெரியசாமி, 22/10, ஜெயகோபால் வீதி, கருங்கல்பாளையம், ஈரோடு – 638 003 அவர்களின் மனு

மேல்முறையீட்டு மனு எண். 65/2020 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 27.01.2020 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதஙகள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதஙகள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதஙகள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழஙகப்படுகிறது.

## <u>ஆணை</u>

### 1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>

மேல்முறையீட்டாளருக்கு பாத்தியப்பட்ட இடத்திற்கு செல்லும் இரு வழிகளையும் மறித்து அமைக்கப்பட்ட மின்மாற்றியை மாற்றி அமைத்திடுமாறு விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 <u>வழக்கின் சுருக்கம்</u>:

2.1 மேல்முறையீட்டாளரின் சர்வே எண் 940/5 ல் அமைக்கப்பட்டுள்ள ஆதிசிவன் நகரில் எண்.28க்கு பாத்தியப்பட்ட இடத்திற்கு செல்லும் இருவழியையும் மறித்து மின்மாற்றி, மின்கம்பம் அமைக்கப்பட்டு எவ்வித முன் அறிவிப்பும் தகவலும் யாருக்கும் தெரிவிக்காமல் மின்மாற்றி அமைத்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.2 இது தொடர்பாக எதிர்ப்பு தெரிவித்து 18.05.2020 கடிதம் இளமின்பொறியாளர்/நசியனூர், உதவி செயற்பொறியாளர்/மேற்கு/ஈரோடு மற்றும் மேற்பார்வை பொறியாளர்/கதிரம்பட்டி/மேட்டுக்கடை/ஈரோடு அவர்களுக்கு சமர்பித்தும் எந்தவித விளக்கமும் தெரிவிக்காமல், எவ்வித முன்னறிவிப்பும் செய்யாமல் மின் கம்பஙகளை தனது இடத்திற்கு செல்லும் பாதைக்கு குறுக்கே அமைத்துள்ளார்கள் என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.3 மேற்படி இடத்தில் செய்யும் வேலைக்கு உடனடியாக தடை உத்தரவு பிறப்பிக்கும்படியும் மின்மாற்றி அமைப்பதால் பயன்பெறும் நபரின் இடத்திலேயே மின் மாற்றி அமைத்து மேல்முறையிட்டாளருக்கு எவ்வித இடையூறும் இல்லாமல் பணியினை மேற்கொள்ள வேண்டுமாய் மேல்முறையீட்டாளர் ஈரோடு மின் பகிர்மான வட்டத்தை 29.05.2020 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், ஈரோடு மின்பகிர்மான வட்டம் 30.09.2020 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில்

அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு</u> –

ஈரோடு மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 30.09.2020 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>முடிவுரை</u>*

*மனுதாரர் மற்றும் வாரியதரப்பினர் மன்றத்தில் சமர்பித்த ஆவணங்கள் மற்றும் வாதங்களின் அடிப்படையில் மனுதாரரான திரு.P.மகாலிங்கம் த/பெ.(லேட்) பெரியசாமி அவர்களுடைய வீட்டுமனையிடம் அமைந்துள்ள சைட் எண். 28, ரீ.ச.எண்.940/5, ஆதிசிவன் நகர் இடத்தில் எந்தவிதமான இடையூறும் இல்லாமல் முள்ளம்பட்டி பஞ்சாயத்துக்கு சொந்தமான பொது பாதையிலேயே மின் மாற்றி மற்றும் மின் கம்பங்கள் அமைக்கப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் கூறியது போல் மின்மாற்றியை மாற்றி அமைக்க விரும்பும்பட்சத்தில் அதற்கு உரிய விண்ணப்பம் அளித்து TNERC Supply code-5(6) ன் படி அதற்குண்டான தொகையினை செலுத்தி மாற்றி அமைத்துக் கொள்ளலாம் என்று இம்மன்றத்தில் உத்தரவு வழஙகப்படுகின்றது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>

**4.1** மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 27.01.2021 அன்று காணொளி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

**4.2** மேல்முறையீட்டாளர் திரு. P.மகாலிங்கம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

**4.3** எதிர்மனுதாரர்கள் திரு.P.அன்புசெழியன், உதவி செயற்பொறியாளர்/இ&ப/மேற்கு/ ஈரோடு மற்றும் திரு.R.S. ராஜேஷ் சேகரன், உதவி மின்பொறியாளர்/நசியனூர், ஈரோடு மின்பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

**4.4** மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின் குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள்,

குறைதீர் மன்றத்தில் சமர்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:</u>**

5.1 மேல்முறையீட்டாளர் பெருந்துறை தாலுக்கா, காஞ்சிகோயில் கிராமத்தில் உள்ள புதிய சர்வே எண் 940/5 இல் அமைக்கப்பட்டுள்ள ஆதிசிவன் நகர் என்ற இடத்தில் மனை எண் 28 தனது பெயரில் கிரயம் செய்து அனுபவித்து வருவதாகவும் தனது இடத்திற்கு கிழபுறம் மற்றும் தென்புறமும் செல்வதற்கு சாலை உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 தற்பொழுது வாரியத்தில் தனக்கு பாத்தியப்பட்ட இடத்திற்கு செல்லும் இரு வழியையும் மறித்து மின்மாற்றி, மின் கம்பம் மற்றும் கம்பி (stay) அமைப்பதாகவும், மேற்கண்ட ஆதிசிவன் நகரில் இதுவரை யாரும் வீடு கட்டவில்லை, ஆனால் வாரியம் எவ்வித முன் அறிவிப்பும் தகவலும் நகரில் பாத்தியப்பட்ட யாருக்கும் தெரிவிக்காமல் மின்மாற்றி மின்கம்பம் மற்றும் ஸ்டே கம்பி அமைத்து மின்சாரம் கொண்டு செல்ல முயற்சி செய்வது தவறாகும் என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 இது தொடர்பாக ஆட்சேபனையும் எதிர்ப்பும் தெரிவித்து கடந்த 18.05.2020 அன்று இளமின்பொறியாளர்/நசியனூர், உதவி செயற்பொறியாளர்/மேற்கு/ஈரோடு மற்றும் மேற்பார்வை பொறியாளர்/கதிரம்பட்டி/மேட்டுக்கடை/ஈரோடு அவர்களுக்கும் எதிர்ப்பு தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளதாகவும் ஆனால் இதுவரை கடிதத்திற்கு எந்தவித விளக்கமும் தெரிவிக்காமல், தங்கள் நகரில் உள்ள உரிமையாளர்களின் அனுமதியும் பெறாமலும், எவ்வித முன்னறிவிப்பும் செய்யாமலும் மின்மாற்றி மற்றும் மின்கம்பங்களை தனது இடத்திற்கு செல்லும் பாதைக்கு குறுக்கே அமைப்பதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 தனிமனிதரின் சௌகரியத்திற்காக, மேல்முறையீட்டாளர் எதிர்ப்பு தெரிவித்தும் அவசர அவசரமாக மின்மாற்றி அமைப்பதற்கான முயற்சிகளையும் மற்றும் அதற்குண்டான வேலைகளையும் செய்து கொண்டே இருப்பதாகவும் ஆகவே மேற்படி இடத்தில் செய்யும் வேலைக்கு உடனடியாக தடை உத்தரவு பிறப்பித்தும் நேரில் ஆய்வு செய்து மேற்படி மின்மாற்றி

அமைப்பதால் பயன்பெறும் நபரின் இடத்திலேயே மின்மாற்றி அமைத்து தங்களுக்கு எவ்வித இடையூறும் இல்லாமல் மின்மாற்றியை மாற்றி அமைத்து கொடுக்கமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதஙகள்:</u>

**6.1** மேல்முறையீட்டாளர் ஆட்சேபனை தெரிவித்து பதிவு அஞ்சல் மூலம் **16.05.2020** தேதியிட்ட கடிதம் அனுப்பியிருந்ததாகவும், அதற்கு முன்னதாகவே மின்மாற்றி நிறுவும் பணி நிறைவு பெற்றவிட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.2** மின் கம்பஙகளும் மின் பாதைகளும் முள்ளம்பட்டி பஞ்சாயத்துக்கு சொந்தமான பாதையில்தான் நிறுவப்பட்டுள்ளது எனவும், யாருடைய தனிப்பட்ட நபரின் நிலத்தின் வழியாக நிறுவப்படவில்லை எனவும், இது குறித்து **27–05–2020** மற்றும் **15–06–2020** நாட்களின் வாயிலாக மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டதாகவும், மேல்முறையீட்டாளர் இடத்திற்கு வரும் வழியில் இடைமறித்து மின்மாற்றி அமைக்கப்பட்டுள்ளதாக கூறுவது தவறு என்றும், முள்ளம்பட்டி பஞ்சாயத்துக்கு சொந்தமான பாதையின் ஓரமாகத்தான் நிறுவப்பட்டுள்ளது என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.3** மேலும் ஆதிசிவன் நகரில் உள்ள நிலத்தின் உரிமையாளர்கள் மின் இணைப்பு கோரும் பட்சத்தில் தற்போது அமைக்கப்பட்டுள்ள மின்பாதையிலிருந்து தான் மின் இணைப்பு வழஙகப்படும் என்றும், அவ்வாறு மின் பாதை இல்லாமலிருந்தால் மேற்கண்ட மின் கம்பம் மற்றும் மின் பாதைக்கான மதிப்பீட்டு தொகையை வாரிய விதிமுறைகளுக்கு உட்பட்டு மேல்முறையீட்டாளர் செலுத்தப்பட வேண்டியதாயிருந்திருக்கும். ஆனால் தற்போதைய சூழலில் மதிப்பீட்டுத் தொகை செலுத்தாமல் மின் இணைப்பு பெற்றுக்கொள்ள ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளது என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு :</u>

**7.1** இருதரப்பு வாதஙகள் மற்றும் கொடுக்கப்பட்டுள்ள ஆவணஙகள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

**7.2** மேல்முறையீட்டாளர் தன்னுடைய வாதுரையில் காஞ்சிகோயில் கிராமத்தில் ஆதிசிவன் நகரில் தன்னுடைய மனை எண் **28–**க்கு கிழக்குபுறம் மற்றும் தென்புறம் சாலை உள்ளதாகவும், தன்னுடைய மனைக்கு செல்லும் இருவழியையும் மறித்து மின்மாற்றி,

மின்கம்பம் மற்றும் தடுப்புக் கம்பி (stay wire) அமைப்பதாக அறிந்து ஆட்சேபனை தெரிவித்து 18.05.2020 அன்று எதிர்மனுதாரருக்கு கடிதம் கொடுத்ததாகவும், ஆனால் தன்னுடைய கடிதத்திற்கு எந்தவித விளக்கமும் அளிக்காமல், தங்கள் நகரில் உள்ள உரிமையாளர்களின் அனுமதி பெறாமல், மனைக்கு செல்லும் பாதைக்கு குறுக்கே மின்மாற்றி அமைப்பதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். ஆகையால் மின்மாற்றி அமைப்பதால் பயன்பெறும் நபரின் இடத்திலேயே மின்மாற்றியை மாற்றி அமைக்குமாறு மேல்முறையீட்டாளர் வேண்டுகிறார்.

7.3 மேல்முறையீட்டாளரின் 16.05.2020 தேதியிட்ட கடிதம் கிடைக்குமுன்பே மின்மாற்றி நிறுவப்பட்டு விட்டதாகவும், மின் பாதையும் மின்கம்பங்களும் முள்ளம்பட்டி பஞ்சாயத்துக்கு சொந்தமான பாதையில்தான் நிறுவப்பட்டுள்ளதாகவும், நபரின் நிலத்தின் வழியாக நிறுவப்படவில்லையென 27.05.2020 மற்றும் 15.06.2020 நாளிட்ட கடிதங்கள் வாயிலாக தெரிவித்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும் மேல்முறையீட்டாளரின் மனைக்கு செல்லும் வழியை மறித்து மின்மாற்றி அமைக்கப்படவில்லையெனவும், ஆதிசிவன் நகரில் உள்ளோரும் மேற்படி மின்பாதை வழியாக மின் இணைப்பு பெற்று பயன்பெறுவார்கள் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 மின்பாதை, மின்கம்பம் மற்றும் மின்மாற்றி ஆகிய அனைத்தும் முள்ளம்பட்டி பஞ்சாயத்து பொதுப் பாதையில் தான் அமைக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்துள்ள புகைப்படமும் மேற்படி மின் தளவாடங்கள் பொதுப் பாதையில் அமைந்துள்ளது என அறிய முடிகிறது. மேலும் மின்சார சட்டம் 2003, பிரிவு 164–ன் படி தந்தி தொலைதொடர்பு சட்டம் 1885–ல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மேற்கொண்டு மின்கம்பங்கள் மற்றும் மின்பாதை அமைப்பதற்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு அனுமதி வழங்கி தமிழ்நாடு அரசாங்கம் G.O (Ms) No.16 Energy (C.3) Department, dated 23.02.2012–ல் ஆணை பிறப்பித்துள்ளது. அந்த ஆணையின்படிதான் எதிர்மனுதாரர்கள் மின்தளவாடங்களை பொதுப்பாதையில் அமைத்துள்ளார்கள். எனவே தற்போதுள்ள இடத்தை விட்டு மேல்முறையீட்டாளர் விரும்பும் வேறு இடத்திற்கு மின்மாற்றியை மாற்றி அமைக்க தமிழ்நாடு மின்சார மின்வழங்கல் விதி 5(6)–ன்படி DCW திட்டத்தின் மூலம் செய்வதற்கு சம்மதம் தெரிவித்து மனு அளித்து, அதற்கு தேவைப்படும் செலவுத் தொகையை மேல்முறையீட்டாளர் செலுத்தும் பட்சத்தில் மின்மாற்றி வேறு இடத்தில் எதிர்மனுதாரர் மாற்றி அமைக்கலாமென தெரிவிக்கப்படுகிறது. ஆகையால் மின்மாற்றி, மின்கம்பம் மற்றும்

மின்பாதையை கட்டணமின்றி மாற்றியமைக்க கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதல்ல என கருதுகிறேன்.

## 8.0 முடிவுரை:

8.1 பத்தி 7–ல் உள்ள தீர்வின்படி தற்போதுள்ள இடத்தை விட்டு மேல்முறையீட்டாளர் விரும்பும் வேறு இடத்திற்கு மின்மாற்றியை மாற்றி அமைக்க தமிழ்நாடு மின்சார மின்வழுங்கல் விதி 5(6)–ன்படி DCW திட்டத்தின் மூலம் செய்வதற்கு சம்மதம் தெரிவித்து மனு அளித்து, அதற்கு தேவைப்படும் செலவுத் தொகையை மேல்முறையீட்டாளர் செலுத்தும் பட்சத்தில் மின்மாற்றி வேறு இடத்தில் எதிர்மனுதாரர் மாற்றி அமைக்கலாமென தெரிவிக்கப்படுகிறது. ஆகையால் மின்மாற்றி, மின்கம்பம் மற்றும் மின்பாதையை கட்டணமின்றி மாற்றியமைக்க கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதல்ல என முடிவு செய்யப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண் 65/2020 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

(செ. தேவராஜன்)
மின்குறைதீர்ப்பாளர்

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

பெறுநர்

1. திரு. P.மகாலிங்கம்,
த/பெ. பெரியசாமி,
22/10, ஜெயகோபால் வீதி,
கருங்கல்பாளையம், ஈரோடு – 638 003.

2. செயற்பொறியாளர்/இ&ப/நகரியம்/ஈரோடு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, EVN ரோடு, ஈரோடு – 638 009.

3. உதவி செயற்பொறியாளர்/இ&ப/மேற்கு/ஈரோடு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மேட்டு கடை பவர் ஹவுஸ், ஈரோடு – 638 102.

4. உதவி மின்பொறியாளர்/நசியனூர்,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
SF No. 45/4, திங்கலூர் ரோடு, நசியனூர் – 638 107.

5. மேற்பார்வை பொறியாளர், – By Email
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, இ.வி.என். ரோடு,
ஈரோடு – 638 009.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.